DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 60/2018**

**(CNR.No: TNTH06-000072 -2018 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : நாகராஜ் | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **DW1** | |

---

நாள் :01.12.2023

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1)** வாதி தரப்பு வழக்குரையை படித்துப்பார்த்து எதிர்வழக்குரை தயார் செய்தேன் என்றால் சரிதான். வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் அசல் வழக்கு எண். 184/2017 பற்றி கூறியுள்ளார்கள் என்றும், அந்த விபரம் தெரிந்துகொண்டு மேற்படி வழக்கு பற்றி விபரம் எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பக்கம் 7ல் பாரா 7ல் அசல் வழக்கு எண், 184/2017 பற்றி விளக்கம் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது சாட்சியம் எனது எதிர்வழக்குரை சங்கதிகளுக்கு முரணாக உள்ளது என்றால் சரிதான். 25.03.2012ம் தேதி வழக்குரை சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டதால் தான் வாதிகள் என்னையும் சேர்த்து வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

2) ஆணையர் அறிக்கைக்கு எனது தரப்பில் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் தாவா சொத்தை அளவீடு செய்தபோது முழுவதுமாக நான் உடனிருந்தேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு பாதை எந்த திசையில் இருக்கிறது என்றால் வடக்கு

மற்றும் கிழக்கு பக்கம் பாதைகள் உள்ளது. 3ம் பிரதிவாதி முருகனிடம் நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு எந்தப்பக்கமாக பாதை உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் வடக்கு பக்கமாக பாதை சொல்லப்பட்டுள்ளது. எத்தனை அடி பாதை என்றால் நான் 5 அடியும், எனது சகோதரர் 5 அடியும் சேர்த்து மொத்தம் 10அடியாக உள்ளது. பிவாசாஆ1 ஆவணத்தில் கிழக்கு பக்கம் பாதை சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ1 ஆவணத்தில் சுருளியம்மாள் 5அடி நிலமும், 3ம் பிரதிவாதி முருகன் 5 அடி நிலமும் பாதைக்காக கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான், சுருளியம்மாள் எனது தாயார், அவர் எனது அண்ணனுக்கு செட்டில்மெண்டாக கொடுத்துள்ளார், முருகனிடம் நான் கிரையம் வாங்கியுள்ளேன். தாவா சொத்தை ஆணையர் பார்வையிட்ட பின்னர் எனது சொத்தில் நான் என்ன மரக்கன்றுகள் வைத்துள்ளேன் என்றால் பாக்கு கன்று வைத்துள்ளேன்.

3) நான் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது வழக்கு சொத்தின் தன்மையை மாற்றும் வகையில் மரக்கன்றுகள் வைத்தது தவறு என்றால் சரியல்ல. 25.03.2018ம் தேதி 1,3 பிரதிவாதிகளுடன் சேர்ந்து கொண்டு வழக்குரை சொத்தின் வடக்கு பகுதியை ஆக்கிரமிக்க முயற்சி செய்தேன் என்றும், அதனால் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

(ஒ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.